**சுருக்கம்**

கல்லூரிக் கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – 2022-23-ஆம் கல்வியாண்டில் ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் சேர்க்காடு, வேலூர் மாவட்டம் ஆகிய இடங்களில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு (இருபாலர்) நிரந்தர கட்டடங்கள் கட்டுதல் – ரூ.24,86,00,000/-க்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வித் (டி1) துறை**

அரசாணை(நிலை)எண்.142

நாள்: 02.08.2022
சுபகிருது வருடம், ஆடி – 17
திருவள்ளுவராண்டு 2053

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.228, உயர்கல்வி (ஜி1)த் துறை, நாள்.19.11.2021
2. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் எண். ந.க.இ3/27363/2021, நாள் 24.05.2022.
3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.18616/ஜெ3/2021, நாள் 06.06.2022.

**ஆணை:**

மேலே முதலாகதாக படிக்கப்பட்ட அரசாணையில், மற்றவைக்கிடையே, 2022-23-ஆம் கல்வியாண்டு முதல் ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் சேர்க்காடு, வேலூர் மாவட்டம் ஆகிய இடங்களில் இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஐந்து பாடப் பிரிவுகளுடன் துவங்குவதற்கு அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 11.04.2022 அன்று நடைபெற்ற உயர்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது பின்வரும் 16 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.199.36 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

**2016-17 முதல் 2020-21 வரை உள்ள ஆண்டுகளில் தொடங்கப்பட்ட கல்லூரிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | குடவாசல் | – | திருவாரூர் மாவட்டம் (2017-18) |
| 2. | காட்டுமன்னார் கோவில் | – | கடலூர் மாவட்டம்(2017-18) |
| 3. | இராமேஸ்வரம் | – | இராமநாதபுரம் மாவட்டம் (2019-20) |
| 4. | திருவில்லிபுத்தூர் | – | விருதுநகர் மாவட்டம்(2020-21) |

5· ஜெயங்கொண்டம் - அரியலூர் மாவட்டம் (2020-21)
6· தரகம்பட்டி - கரூர் மாவட்டம்(2020-21)

<u>2022-23 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ள கல்லூரிகள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | திருச்சுழி | - | விருதுநகர் மாவட்டம் |
| 2· | திருக்கோவிலூர் | - | கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| 3· | தாளவாடி | - | ஈரோடு மாவட்டம் |
| 4· | ஒட்டன்சத்திரம் | - | திண்டுக்கல் மாவட்டம் |
| 5· | மானூர் | - | திருநெல்வேலி மாவட்டம் |
| 6. | தாராபுரம் | - | திருப்பூர் மாவட்டம் |
| 7· | ஏரியூர் | - | தருமபுரி மாவட்டம் |
| 8· | ஆலங்குடி | - | புதுக்கோட்டை மாவட்டம் |
| 9· | கூத்தாநல்லூர் | - | திருவாரூர் மாவட்டம் |
| 10· | சேர்க்காடு | - | வேலூர் மாவட்டம் |

3. மேற்படி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள 16 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் சேர்க்காடு, வேலூர் மாவட்டம் ஆகிய இடங்களில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிரந்தர கட்டடங்கள் கட்டுவது தொடர்பாக சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் / வருவாய் துறையால் பின்வரும் அரசு/தானம் நிலங்கள் தெரிவுச்செய்யப்பட்டு அந்நிலங்களுக்கு பட்டாமாறுதல், முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளன :-

I). <u>அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம்</u>

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளில் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டுவதற்கு ஆலங்குடி வட்டம், கீழாத்தூர் கிராமம் புல எண். 135/3, ஹெக்டேர் 10.47.0 ஏர்ஸ் "அரசு புறம்போக்கு தோப்பு" என வகைபாடு செய்யப்பட்டுள்ள மொத்த விஸ்தீரணத்தில் ஹெக்டேர் 2.32.57 ஏர்ஸ் பரப்பளவு நிலத்தினையும் மற்றும் புல எண். 135/4, ஹெக்டேர் 3.32.0 ஏர்ஸ் "அரசு புறம்போக்கு நத்தம்" என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள மொத்த விஸ்தீரணத்தில் ஹெக்டேர் 1.38.43 ஏர்ஸ் பரப்பளவு நிலத்தினையும் ஆகக்கூடுதல் ஹெக்டேர் 3.71.0 ஏர்ஸ் நிலத்தினை உயர்கல்வித் துறைக்கு நிலமாற்ற முன்நுழைவு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

II). <u>அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேர்க்காடு, வேலூர் மாவட்டம்</u>

வேலூர் மாவட்டம், சேர்க்காடு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டுவதற்கு காட்பாடி வட்டம், மேல்பாடி கிராமம் புன்செய் சர்வே எண்கள். 150/1-ல், 1.17.20 ஹெக்டேர் , 170-ல், 0.12.00 ஹெக்டேர், 171/2-ல், 0.11.00 ஹெக்டேர், 172 -ல், 0.18.00 ஹெக்டேர்,178/2- ல், 0.41.50 ஹெக்டேர்

...3

நிலங்களை, மேற்படி நிலங்களின் உரிமையாளரான வேலூர் ஸ்ரீவள்ளி மணாளர் திருப்புகழ் பாராயண சங்கத்தின் நிர்வாகிகளான திரு. பரமசிவம் அவர்களின் மகன் திரு. A. P. சண்முகம் , திரு. மாணிக்கம் அவர்களின் மகன் திரு. சிதம்பரம் மற்றும் திரு. முருகன் அவர்களின் மகன் திரு. விநாயகம் ஆகியோரிடமிருந்து காட்பாடி சார்பதிவக அலுவலக ஆவண எண்.3589/2022, நாள், 12.04.2022-ன்படி தானமாக பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட மேற்படி நிலத்திற்கு வேலூர் மாவட்டம், காட்பாடி வட்ட வருவாய் துறையால் பட்டா எண்.3388-ல் தற்காலிக முதல்வர் மற்றும் கல்வி இணை இயக்குநர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்ற பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

4. மேலே, பத்தி-2ல் உள்ள அறிவிப்பிற்கிணங்க, கல்லூரிக் கல்வி இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் மேற்காணும் இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள நிலங்களில் நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவது தொடர்பாக பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக் கல்வி வட்ட தலைமைப் பொறியாளரிடமிருந்து கீழ்கண்டவாறு திட்டமதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளது என தெரிவித்து, அத்திட்டமதிப்பீட்டுகளின் படி இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு புதிதாக கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.24,86,00,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு 2022-23-ஆம் நிதியாண்டிலேயே வழங்கி ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வரிசை எண். | கல்லூரியின் பெயர் | திட்டமதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம் | 12.40 |
| 2. | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேர்க்காடு, வேலூர் மாவட்டம் | 12.46 |
| | **மொத்தம்** | **24.86** |

5. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்த அரசு, 2022-23-ஆம் கல்வியாண்டில், ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் சேர்க்காடு, வேலூர் மாவட்டம் ஆகிய இடங்களில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு (இருபாலர்) சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் /வருவாய் துறையால் முன்நுழைவு அனுமதி மற்றும் பட்டா மாறுதல் வழங்கப்பட்டுள்ள மேலே பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களில் நிரந்தர கட்டடங்கள் கட்டுவதற்கு முறையே ஒரு கல்லூரிக்கு ரூ.12,40,00,000/-ம் மற்றும் மற்றொரு கல்லூரிக்கு ரூ.12,46,00,000/-ம் ஆக மொத்தம் ரூ.24,86,00,000/- க்கு (ரூபாய் இருபத்து நான்கு கோடியே எண்பத்தாறு இலட்சம் மட்டும்) நிருவாக அனுமதியும் மற்றும் அத்தொகையை 2022-23-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டமதிப்பீட்டிலிருந்து ஒப்பளிப்பு செய்தும் ஆணை ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4202 - கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு - 01 பொதுக்கல்வி - 203 பல்கலைக் கழக கல்வியும், உயர்கல்வியும் - மாநிலச் செலவினங்கள் -JB கட்டடங்கள் - தொழில்நுட்பக்கல்வி பிரிவால் நிருவகிக்கப்படுபவை - 416 பெரும்பணிகள்-01 பெரும்பணிகள்.

(IFHRMS த.தொ.கு. 4202 - 01- 203 - JB - 41601)"

7. இவ்வாணை, அரசாணை (நிலை) எண். 519, நிதித் (சம்பளங்கள்) துறை, நாள்.29.9.1997-இன்படி, நிதித் துறையின் ஒப்புதலைப் பெற வேண்டியதில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-15.
தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை -25.
சம்பந்தப்பட்ட கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
சம்பந்தப்பட்ட கருவூல கணக்கு அலுவலர்கள்.
உள்ளுறை கணக்கு அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-9.

<u>நகல்</u>
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை, சென்னை-9.
நிதித்(கல்வி-I)துறை, சென்னை -9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

2/8/22
பிரிவு அலுவலர்